**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No. 8 /2021**

Deposition of Witness : LW5 /PW2

| Name | சக்திவேல் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | பிச்சைமுத்து | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 17.02.2026.** | | | |

1ம் **எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசவின்படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1) நான் தாந்தோணிமலை பாரதிதாசன் நகரில் குடியிருந்து பள்ளி ஆசிரியாராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 09.03.2017 ம் தேதி மாலை 5 மணி அளவில் நான் பள்ளியில் இருந்து எனது வீட்டிற்கு செல்வதற்காக கணபதிபாளையம் VIP நகர் அருகில் வந்தபோது பசுபதிபாளையம் போலிசார் அங்கு இந்த வழக்கு சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் தயார் செய்து கொண்டிருந்தார்கள். போலிசார் சம்பவ இடம் குறித்து வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் எத்தனை வருடங்களாக பாரதிதாசன் நகரில் குடியிருந்து வருகிறேன் என்றால் 2023 ல் இருந்து குடியிருந்து வருகிறேன். சம்பவம் நடந்த இடத்திற்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு துூரம் என்றால் அதே காம்பவுண்டில் குடியிருந்து வந்தேன். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவம் நடந்தது எத்தனை மணி

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

என்றால் எனக்கு தெரியாது. இவ்வழக்கின் எதிரிகளை தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை குற்றவாளிகள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னிடம் எதற்காக கையெழுத்து வாங்கினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வரைபடத்திற்கு மட்டும் சாட்சியாக இருக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதனால் கையொப்பம் செய்தேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**Sd/–T.Wajitha Thabassm**
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No. 8 /2021**

Deposition of Witness : LW1 /PW1

| Name | **சண்முகம்** | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | **நாட்ராயன்** | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 17.02.2026.** | | | |

1ம் **எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசவின்படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1) நான் பசுபதிபாளையத்தில் ஆட்டோ டிரைவாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1ம் எதிரி கோபியை தெரியாது. வழக்கின் 2 வது எதிரி பாக்கியநாதனை எனக்கு தெரியாது. கடந்த 8 வருடத்திற்கு முன்பு நான் பசுபதிபாளையம் காவல்நிலையத்திற்கு முன்பு ஆட்டோவில் இருந்தபோது பசுபதிபாளையம் போலிசார் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து ஒரு கையெழுத்து வாங்கினார்கள். அந்த கையெழுத்து எதற்காக வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் கையெழுத்து செய்து கொடுத்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. அந்த **கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பை ஆதரிக்காததால் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதியளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1) போலிசார் விசாரணையில் கடந்த 09.03.2017 ம்தேதி மதியம் 2 மணி அளவில்

Sd/-T.Wajitha Thabassm

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

ஆட்டோ சவாரியாக கணபதிபாளையம் விஜபி நகருக்கு சென்றிருந்தபோது தங்கராஜ் கொசுவலை கம்பெனி அருகில் ஆஜர் எதிரி கோபி மற்றும் பாக்கியநாதன் என்பவர்கள் மாடியில் உள்ள வீட்டில் பெண் ஒருவரை வைத்து ரூ.1000 கொடுத்தால் அவருடன் ஜாலியாக இருக்கலாம் என்று கூறியதாகவும், அங்கு சென்று பார்த்தபோது மீனாட்சி என்ற ஒரு பெண் இருந்ததாகவும், அப்போது நான் என்னிடம் பணம் இல்லாததால் சென்று எடுத்து வருவதாகவும், சொல்லிவிட்டு பசுபதிபாளையம் காவல் நிலையம் வந்து எழுத்து மூலமான புகார் கொடுத்ததாகவும், அதனடிப்படையில் பசுபதிபாளையம் வட்ட காவல் ஆய்வாளர் பெண் காவலர்களுடன் சம்பவ வீட்டிற்கு என்னை அழைத்து சென்றார்கள் என்றும், வீட்டை சோதனை செய்ததில் ஆஜர் எதிரியையும், எதிரி பாக்கியநாதன் மற்றும் மீனாட்சி ஆகியோர்களை கைது செய்து நடவடிக்கை எடுத்ததாகவும், சம்பவ வீட்டை நான் அடையாளம் காட்டினேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது நடந்த சம்பவங்களை மறைத்து எதிரிகளை இக்குற்றவழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**Sd/–T.Wajitha Thabassm**
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.